**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 07.02.2024**

**Case No : CC 3 / 2020**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** தங்க ஈஸ்வரி | **Caste:** |
| **Father / Husband Name:** நவ ஸ்டீபன் | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 36** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 07.02.2024**

முதல் விசாரணை:

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். புகார்தாரரை தெரியும். அவருக்கு கண்பார்வை தெரியாது. அவர் மகன் ஏற்பாட்டின்பேரில் நான் அவருக்கு சாப்பாடு கொடுத்து வருகிறனே். எதிரியை தெரியும். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 11.00 மணியளவில் நான் புகார்தாரருக்கு சாப்பாடு கொடுப்பதற்கு சென்றேன். அப்போது புகார்தாரர் வீட்டில் ரத்தக்காயத்துடன் கிடந்தார். அவருக்கு வலதுகையில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் அவரிடம் விசாரித்தபோது எதிரி அவரை இரும்பு கம்பியால் அடித்ததாகக் கூறினார். நான் உடனே புகார்தாரரின் மகனுக்கு போன் மூலம் தகவல் கொடுத்தேன். புகார்தாரரை நான் திருச்செந்தூர் அரசு மருத்தவமனைக்கு அழைத்து சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

புகாரில் புகார்தாரர் கையெழுத்து செய்து கொடுத்தாரா அல்லது கைரேகை வைத்தாரா என்றால் கைரேகை வைத்துக் கொடுத்தார். அந்த புகாரில்தான் நான் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் தெரியாது. எதிரிக்கும் புகார்தாரருக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. வழக்கு

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு கண்பார்வை இல்லை என்றால் சரிதான். காவல்துதுறையினர் கேட்டுக் கொண்தற்கிணங்க நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். புகார்தாரருக்கு சாப்பாடு கொடுக்க அவருடைய மகன் மாதம் ரூ.1500 தந்தார். புகார்தாரருக்கு கண் தெரியாததால் வீட்டின் குப்பையை பக்கத்து வீட்டில் கொண்டு போடுவது வழக்கம் என்றால் தெரியாது. புகார்தாரருக்கு நான் உணவு அளித்து வருவதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 07.02.2024**

**Case No** : **CC 3 / 2020**

**Deposition of Witness** : **P.W. 3**

| | |
|---|---|
| **Name:** சிவா ஆதித்தன் | **Caste:** |
| **Father / Husband Name:** ஆறுமுக பாண்டி | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 34** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 07.02.2024**

முதல் விசாரணை:

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து சென்னையில் ஃபுட் ஏஜென்சி வைத்து தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் என் அம்மா ஆவார். அவர் கடந்த 2 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். அவருக்கு கண்பார்வை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 2.15 மணியளவில் அ.சா.2 எனக்கு போன் மூலம் என் அம்மா அடிபட்டு கிடப்பதாகவும், அவரை ஆஜர் எதிரி அடித்ததாகவும் தகவல் கூறினார். மறுநாள் காலை நான் என் அம்மாவை திருச்செந்தூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் அவருக்கு இடது பக்க கையிலும் முதுகிலும் காயம் ஏற்பட்டிருந்தது. நடக்க முடியாமல் இருந்தார். நான் என் அம்மாவிடம் விசாரித்தபோது தான் வெளியே குப்பை பெருக்கிக் கொண்டிருந்தபோது எதிரி இரும்புக் கம்பியால் அடித்ததாக சொன்னார். என் அம்மா 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தாயாருக்கு கண்பார்வை இல்லாததால் பக்கத்து வீட்டை சேர்ந்த நபர்களிடம் சண்டை செய்வது வழக்கம் என்றால் இல்லை. சம்பவத்தின்போது புகார்தாருக்கு 68 வயதிருக்கும். வயது அதிகமாக உள்ளதால் தடுமாற்றத்துடன் இருப்பார் என்றால்

சரிதான். எனக்கும் எதிரிக்கும் எந்த பகையும் இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் வீட்டில் அடிபட்டு கிடந்ததாக எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். புகார்தாரரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் அ.சா.2 அழைத்து சென்றார். நான் மருத்துவமனை செல்லும்போது என் தாயாருடன் யார் இருந்தார் என்றால் அ.சா.2 இருந்தார். புகார்தாரர் கண் பார்வையற்றவர் என்பதால் அவரே தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 07.02.2024**

**Case No** : **CC 3 / 2020**

**Deposition of Witness** : **P.W. 4**

| | |
|---|---|
| **Name:** சண்முகநாதன் | **Caste:** |
| **Father / Husband Name:** ஆறுமுக பாண்டி | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 36** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 07.02.2024**

முதல் விசாரணை:

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து சென்னையில் மளிகைக்கடையில் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் என் அம்மா ஆவார். அவர் கடந்த 3 வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். அவருக்கு கண்பார்வை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 2.15 மணியளவில் அ.சா.2 எனக்கு போன் மூலம் என் அம்மா அடிபட்டு கிடப்பதாகவும், அவரை ஆஜர் எதிரி அடித்ததாகவும் தகவல் கூறினார். மறுநாள் காலை நான் என் அம்மாவை திருச்செந்தூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் அவருக்கு இடது பக்க கையிலும் முதுகிலும் காயம் ஏற்பட்டிருந்தது. நடக்க முடியாமல் இருந்தார். நான் என் அம்மாவிடம் விசாரித்தபோது தான் வெளியே குப்பை பெருக்கிக் கொண்டிருந்தபோது எதிரி இரும்புக் கம்பியால் அடித்ததாக சொன்னார். என் அம்மா 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் மற்றும் எதிரிக்கு என்ன பிரச்சனை என்று தெரியாது. சம்பவத்தின்போது புகார்தாரருக்கு 70 வயதிருக்கும். என் தாயாருக்கு கண்பார்வை இல்லாததால் பக்கத்து வீட்டை சேர்ந்த நபர்களிடம் சண்டை செய்வது வழக்கம் என்றால் இல்லை.

சம்பவத்தின்போது புகார்தாரருக்கு வயது அதிகமாக உள்ளதால் தடுமாற்றத்துடன் இருப்பார் என்றால் சரிதான். புகார்தாரரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் அ.சா.2 மற்றும் குமரேசன் என்பவர் அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனை செல்லும்போது என் தாயாருடன் யார் இருந்தார் என்றால் அ.சா.2 இருந்தார். எதிரி என் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.